Booklet Serial No.

| தேர்வு | : | தொகுதி V-A -க்குட்பட்ட பணிகளுக்கான எழுத்துத் தேர்வு |
|---|---|---|
| பாடம் | : | பொதுத் தமிழ் [தாள்-I] |
| தேர்வு நாள் | : | 18.12.2022 மு.ப. |

DO NOT USE THIS AREA

Don't write anything in this box


| தேர்வு | : | தொகுதி V-A -க்குட்பட்ட பணிகளுக்கான எழுத்துத் தேர்வு |
|---|---|---|
| பாடம் | : | பொதுத் தமிழ் [தாள்-I] |
| தேர்வு நாள் | : | 18.12.2022 மு.ப. |


பதிவு எண்

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச் சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதில் அளிக்காத வினா விடைப் பகுதிகளை தேர்வு எழுதிய பேனாவினால் குறுக்கு கோடிட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

# மாதிரி வினாத்தாள்

# தொகுதி –V-A

# தாள் - I

# பொதுத்தமிழ் (பட்டப்படிப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு .......... பக்கங்களைக் கொண்டது)

## அறிவுரைகள்

(கீழக்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1) இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காக தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

2) விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் ...... பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதனை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பை தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3) ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

4) விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவு எண்ணை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே எழுத வேண்டும். இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களின் விடைத்தாள் தொகுப்பு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரருக்கான அறிவுரையின் பத்தி 12-B-இன் படி செல்லாததாக்கப்படும்.

5) விண்ணப்பதாரர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

6) விண்ணபதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

7) விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்தவேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுதவேண்டும்.

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**தொகுதி –V-A**

**மாதிரி வினாத்தாள்**

**(விரிந்துரைக்கும் வகை)**

**தாள்-I**

**பொதுத்தமிழ் (பட்டப்படிப்புத்தரம்)**

***********

## அலகு-I

(i) **பின்வரும் ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு தலைப்பிற்கு கட்டுரை வரைக.**

(ii) **கட்டுரை 300 சொற்களில் இருக்க வேண்டும்.**

(1X15=15)

1) தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் பெறும் இடத்தினை விளக்குக.
2) இணைய ஊடகம் உருவாக்கமும் பயன்பாடும் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
3) சுற்றுச்சூழல் பேணுவதில் மாணவர்களின் பங்கு குறித்து விவரித்தெழுதுக.
4) பாலினச் சமத்துவத்தின் தேவை குறித்து கட்டுரை எழுதுக.
5) சமூக நீதி வரலாற்றில் பெண்களின் பங்கு குறித்து ஒரு கட்டுரை வரைக.

## அலகு-II

(i) **பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

(ii) **ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

(5X2=10)

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் தூது என்பதும் ஒன்று. இது வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர் பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக மாலையை வாங்கிவருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் "கலிவெண்பாவால் இயற்றப்படுவதாகும். "தமிழ்விடுதூது" மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்நூலை 1930-இல் உ.வே.சா. முதன் முதலில் பதிப்பித்தார்.

**<u>வினாக்கள்</u>**

1. தூது இலக்கியத்தின் வேறுபெயர்கள் யாவை?
2. தூது இலக்கியம் எப்பாவினால் இயற்றப்படுகிறது?
3. தமிழ்விடுதூது எத்தனை கண்ணிகளைக் கொண்டது?
4. தமிழ்விடுதூதினை முதன் முதலில் பதிப்பித்தவர் யார்?
5. தூது எவ்வகை இலக்கியம்?

## <u>அலகு-III</u>

(i) **கொடுக்கப்பட்ட பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

(1X10=10)

சிக்கனமாய் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா? மிகுதியான செலவுகளைக் குறைத்தல் வேண்டும். அப்படியானால் நல்ல உணவு சிறந்த ஆடை மற்றும் தேவையான பொருள்கள் முதலியவற்றுக்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா? அற்றன்று நோய் வந்துவிட்டால் அதைத் தீர்ப்பதற்கு மருத்துவச் செலவு செய்யாமல் இருப்பதா? அதுவும் அன்று தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான இன்றியமையாத செலவுகளைச் செய்யத்தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை நாம் மேற்கொள்ளல் வேண்டும். எறும்புக் கூட்டங்கள் மழைக்காலத்தில் தனக்கு வேண்டிய உணவைக் கோடைக் காலத்திலேயே தேடி வைத்துக்கொள்கின்றன அன்றோ? அது போல நாமும், உழைக்கவும் ஊதியம் மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும் போதே சேர்த்து வைக்க முயலுதல் வேண்டும். எனவே, எதிர்காலப் பாதுகாப்பு மிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறுதுளிப் பெருவெள்ளம் என்பது போல, சிறுகச் சிறுகச் சேமித்தாலே பெரும் பொருள் சேமித்துவிடலாம். சிக்கனமாக வாழ்வோம்; சிறப்புடன் வாழ்வோம்; வாழ்க வளத்துடன்.

## அலகு-IV

(i) கொடுக்கப்பட்ட சுருக்கமான குறிப்புகளைக் கொண்டு விரிவாக எழுதுக.

(1X10=10)

அனைவரையும் ஒன்றுபடுத்த உதவும் கருவி மொழி - மொழியால் மக்கள் சமுதாயம் வாழ்கிறது - தாய்மொழி நமது சிந்தனைகளை வெளிப்படுத்தும் சிறந்த கருவி - தாய்மொழியின் பேராற்றல் சமயங்கள், குலங்கள், தொழில்கள், கொள்கைகளால் வேற்றுமையுற்ற பலப் பிரிவினரும் இணைக்கும் இணைப்புக் கருவி தாய்மொழி.

## அலகு-V

(i) கொடுக்கப்பட்ட ஆங்கில பத்தியை நன்குப் படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும்.

(1X10=10)

The Dravidian movement in South India, Tamil Nadu (Madras) had managed to give itself the high – sounding and desirable designation of the 'Justice Party'. It got liquidated in the election of 1936-37. Like a phoenix, however, it burst up in 1945 under the regional but locally supranational designation, Dravidian Federation. Its leader E.V.Ramaswamy, popularly known as Periyar, turned it to be anti-higher caste in attitude than its predecessor the Justice Party.

E.V.Periyar's anti caste and anti-religion attitude had taken its shape almost quarter of a century. As a member of the old Justice Party, far back in 1923 he had started an association called 'Suyamariyathai Iyakkam' or self-respect movement. Its main objective was to root out from 'Dravidians' all superstitious beliefs based on religion and caste and to debunk all higher caste superstitions beliefs and practices.

The Dravidian movement started a weekly Journal to propagate its views and through its columns as well as through other newspapers it contributed a series of articles.

## அலகு – VI

(i) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் 15 மதிப்பெண்.

(iii) 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(1X15=15)

1) 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்ற மாணவியர், உயர்கல்வியில் சேருமிடத்து "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்" உயர்கல்வித் திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1000 பெறுவதற்குத் தகுதியுடையர். சார்ந்த அரசு கல்லூரி முதல்வர்கள் / அரசு நிறுவன இயக்குநர்கள் தகுதியுடையோரை மாணவியரின் தரவுகளைத் திரட்டி உயர்கல்வித்துறை இயக்குநர் வழியாகச் சமூக நல்வாழ்வு மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறைக்கு வழங்கக்கோரி ஓர் அலுவலகக் கடிதம் வரைக.

2) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன், பல்வேறு நிறுவனங்கள் மூலம் பயிற்சி பெற்றவர்கள்; பயிற்சியால் முன்னேறியவர்கள் குறித்து ஓராண்டுத் திட்ட மதிப்பீடு (2021-2022) வரைக.

3) தமிழகத்தில் கடந்த பத்தாண்டுகளில் (2011-2021) உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்குத் தேவைப்படும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்; அறிவியல் ஆய்வுக் கருவிகள்; ஆய்வுக்குரிய வேதிப்பொருள்கள்; ஏனைய தேவைகள் ஆகியன குறித்து ஒரு கருத்துருவை (Proposal) தயாரித்து தமிழக அரசுக்கு வழங்குக.

## அலகு – VII

(i) **பின்வரும் ஐந்து பிரிவுகளில், ஒவ்வொரு பகுதியிலும் ஐந்து வினாக்கள் உள்ளன.**

(ii) **ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்**

(iii) **ஒவ்வொரு பகுதிக்கும் ஆறு மதிப்பெண்** (3X2=6)

(iv) **ஐந்து பகுதிக்கும் சேர்த்து முப்பது மதிப்பெண்** (5X6=30)

**அ) வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

எவையேனும் மூன்று வினாக்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றினை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. பின்வரும் அடுக்குத்தொடரை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
   எண்ணியெண்ணி.
2. பின்வரும் சொல்லை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
   வழித்துணை.
3. பின்வரும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
   எண்ணியதை எண்ணியவரை.
4. பின்வரும் எண்ணும்மையை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
   ஈடுமில்லை இணையுமில்லை.

5. பின்வரும் மரபுத்தொடரை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

**ஆ) இணைச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைத்தல்.**

பின்வரும் இணைச் சொற்களில் மூன்றினுக்குத் தொடர் அமைக்க.

1) ஜயந்திரிபு
2) இடுக்கு மடுக்கு
3) வெள்ளை வெளேர்
4) அழுது அழுது
5) வாடி வதங்கி

**இ) அகர வரிசைப்படுத்துதல்**

எவையேனும் மூன்று வினாக்களைத் தேர்ந்தெடுத்து அகரவரிசைப்படுத்துக.

1. உயர்கல்வி, அரும்பு, உயர்வு, அருஞ்சொல்
2. தலை, திண்ணை, தூண், தில்லை
3. முல்லை, எழு, பல், எள்
4. மரம், மறம், கரம், புரம்
5. ஒருத்தி, ஒருவன், ஒன்று, ஒப்புமை

**ஈ) பிழைநீக்கி எழுதுதல்**

எவையேனும் மூன்று தெடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

1. அறிய சிலைகளின் பெருமையை அரியமாட்டார்கள்.
2. எனக்கு சோறு கிடைக்கிறது. அதுவேப் போதும்.
3. ஒவ்வொரு பூக்களும் மலரும்போது மணம் வீசுகின்றன.
4. உடனே ஆவண செய்யும்படி ஆசிரியர் தலைமையாசிரியரை வேண்டிக் கேட்டுக்கொண்டார்.
5. இனி சிலேட்டின்மீது வெள்ளை சாக்பீஸைக் கொண்டு அவளால் படங்களை வரைய முடியும்.

**உ) கலைச்சொல்லாக்கம்**

எவையேனும் மூன்று சொற்களுக்குத் துறைசார் ஆட்சித் தமிழ் கலைச்சொல்லாக்கம் தருக.

1. Block Development Office.
2. Caustic Remarks.
3. Default Book.
4. Hire Purchase Scheme.
5. Reinstatement.